1987 மார்ச் 26]

தள்ளி போடப்பட்டது. தற்போது 30 லட்சம் ஆகுமென அதற்கு மதிப்பீடு பெறப்பட்டிருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுவது என்ற பிரச்சினை நாகர்கோவிலில் மட்டுமல்ல பல இடங்களிலும் காலதாமதமாவதற்குக் காரணம், நிதி பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே இந்த நிலையில் வழக்கறிஞர்களே முன்வந்து 10 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் முன் பணமாக தருகிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாவட்ட தலைநகரங்களில் இருக்கிற 50 வழக்கறிஞர்கள் சேர்ந்து முன்பணமாக 20 ஆயிரம் தருகிறோம் என்று முன் வந்தால் அப்படிப்பட்டவர்களை வைத்து அரசாங்கமே கட்டிடத்தைக் கட்டி அவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு, இந்த முறையை அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல ஆலோசனையை அரசு ஏற்கெனவே ஆய்ந்து வருகிறது. வழக்கறிஞர் சங்கத்திடம் இது பற்றி பேசி வருகிறது. வழக்கறிஞர்களே முன் வந்து ஓரளவுக்கு அதற்குப் பணத்தைத் தருகிறபோது (HUDCO) நிறுவனத்தின் மூலம் மீதி பணத்தைப் பெற்று கட்டிடத்தைக் கட்டித் தந்தால் தான் பன்னெடு ஆண்டுகளாக இருந்து வருகிற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்ற முறையிலே இதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தற்போது தீவிர முயற்சியில் இருக்கிறது.

கோவை சட்டக் கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் பணி.

193—(*வினா எண் 10763) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை சட்டக் கல்லூரியில் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்க தகுதி படைத்த தமிழாசிரியர்களை அரசு நியமனம் செய்யுமா ?

[1987 மார்ச் 26

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரியில் பணி புரிகின்ற ஆசிரியர்கள் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்கத் தகுதி படைத்தவர்கள்; ஆகவே அவர்களைத் தவிர தமிழில் சொல்லிக் கொடுக்க தனியாக வேறு ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் உத்தேசம் இல்லை.

கதர் கிராமத் தொழில் துறையின் மின்விசை எண்ணெய் செக்குகள்.

194—(*வினா எண் 9497) **திரு. க. பாரமலை:** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கதர் கிராமத் தொழில் துறையின் உதவி பெற்றும், சுயவேலை வாய்ப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் உதவிபெற்றும் துவக்கப்பட்ட மின்விசை எண்ணெய் செக்குகள் மொத்தம் எத்தனை ?

(ஆ) அதில் பெரும்பாலானவை செயலிழந்து போய் விட்டது என்று சொல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவற்றை செயல்பட வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மொத்தம் மின் விசை எண்ணெய் செக்குகள் 2,390.

(ஆ) 1986 மார்ச் மாதம் வரை 480 மின்விசை செக்குகள் சிறு குறைபாடுகளின் காரணமாக செயல்படாமல் இருக்கின்ற தகவல் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

(இ) பம்பாய் கதர் வாரிய ஆய்வுக் குழுவின் மூலமாக 1986-87 ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இவைகளைப் பழுதுபார்க்க 4 சேவா நிலையங்களை அமைத்துத் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.